திரு.தி.ஜனார்த்தனன்,
நகர்மன்ற தலைவர்

நகராட்சி அலுவலகம், புன்செய்ப் புளியம்பட்டி
நாள்.11.03.2022

அன்புடையீர் வணக்கம்,

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் சாதாரண கூட்டம் பிலவ வருடம் மாசி மாதம் 30–ந் தேதி 2022-ம் ஆண்டு **மார்ச் மாதம் 14 –ந் தேதி திங்கட் கிழமை காலை 10.00 மணியளவில்** நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. கூட்ட பொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன் தாங்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்

(தி.ஜனார்த்தனன்)

**<u>பொருள் எண் : 1</u>**

**<u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள்</u>**

திராவிட முன்னேற்ற கழக தலைவரும், மாண்புமிகு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் 4 வது நகர்மன்ற தலைவராக தேர்வு செய்யப்பட்ட திரு.தி.ஜனார்த்தனன் மற்றும் துணைத் தலைவராக தேர்வு செய்யப்பட்ட திரு.பி.ஏ.சிதம்பரம் மற்றும் 18 வார்டுகளில் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு ஆதரவு அளித்து வெற்றி பெறச் செய்த புன்செய்ப் புளியம்பட்டி நகரத்தின் பொது மக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்ளும் தீர்மானம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>பொருள் எண் : 2</u>**

**நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் மொத்தம் 18 வார்டுகளில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால்களும் 40 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. மேற்கண்ட மழைநீர் வடிகால்களில் ஆங்காங்கே சேதமடைந்து நீரோட்டம் சீராக இல்லாமல் பொதுமக்களுக்கு இடையூராக இருந்து வருகிறது. எனவே மேற்கண்ட வடிகால்களை சீரமைக்கவும், ஒரு சில இடங்களில் புதியதாக அமைக்கவும், தனியார் கலந்தாலோசகர் மூலம் திட்ட அறிக்கையினை தயார் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண் : 3**

இந்நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-2022ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் ஜவஹர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள வாரச்சந்தை மேம்படுத்துதல் பணிக்காக 16.02.2022 அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Off Line-ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை 28.02.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் ஜவஹர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள வாரச்சந்தை மேம்படுத்துதல் பணி | 359.85 இலட்சம் | அகிலா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஈரோடு | 5.26% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | ஹரிராம் கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஈரோடு | 6.44% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை, மதிப்பீட்டை விட 5.26% அதிகமாக கொடுத்துள்ள அகிலா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஈரோடு அவர்களை விலை குறைப்பு செய்ய கேட்டு 28.02.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் ஒப்பந்ததாரர் அகிலா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஈரோடு தற்போது அதிகரித்து வரும் போக்குவரத்து செலவு மற்றும் ஆட்கூலி உயர்வு காரணமாகவும் 16.02.2022 ஆம் தேதியன்று ஏற்கனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 5.26% கூடுதலாக குறிப்பிட்டுள்ளதை குறைத்து மீண்டும் விலை விகிதத்தில் 4.98% கூடுதலாக இப்பணியினை மேற்கொள்ள 02.03.2022 அன்று ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார். எனவே, அகிலா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1146/2021/இ1)**

**அலுவலக குறிப்பு:**

2 அ) வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீட்டை விட 4.98% அதகிமாக பணி செய்து கொடுக்க அகிலா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஈரோடு அவர்கள் சம்மத கடிதம் கொடுத்துள்ளார்கள். மேற்கண்ட பணி திட்டப்பணியாக உள்ளதாலும், உரிய நேரத்தில் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஏற்படுவதாலும் மாநில உள்ளாட்சித்துறை பொறியாளர்கள் கையேடு பகுதி–1 பாகம் 2.7.2ன்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மதிப்பீட்டிற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 4**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மின்னஞ்சல் செய்தி நாள்.09.03.2022ல் குறிப்பிட்டுள்ளதற்கினங்க, கலைஞர் நகர் புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021–2022ன் கீழ் ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, தில்லை நகரில் புதியதாக பார்க் மற்றும் குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் கூடிய பொழுதுபோக்கு பூங்கா அமைத்தல் பணிக்காக ரூ.80.00 இலட்சத்திற்கு பிரேரணை தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பணியின் விபரம்:–**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.3, தில்லை நகர் பகுதியில் புதியதாக பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் அமைக்கும் பணி | 80.00 |
| | **மொத்தம்** | **80.00** |

**(ந.க.எண். 397 /2022/இ1)**
**அலுவலகக் குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) அரசு மானியம் வழங்கும் தொகையில் பணி மேற்கொள்ளலாம்.
இ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று முன்மொழிவு அனுப்பியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண் : 5**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-2022-ன் கீழ் மேற்கொள்ளப்படும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை ஆங்கில நாளிதழ் (தென்னிந்திய பதிப்பு) ஒன்றிலும் மற்றும் தமிழ் நாளிதழ் (மாநில அளவில் அனைத்து பதிப்புகள்) ஒன்றிலும் வெளியிட்டதற்கான விளம்பரத்தொகை ரூ.7,396/- Sudha Ads, Chennai என்ற நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1146/2021/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ)அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 6**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக நான்கு நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் 01.02.2022 முதல் 31.03.2022 வரை ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 31.03.2022 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், நகர்புற உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்பட உள்ளதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை

விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.04.2022 முதல் 30.04.2022 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந. க. எண்.387/2017/இ1)

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண் : 7</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலாக காணப்படுகிறது. இருப்பினும் இந்நகராட்சி பகுதியில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வாயிலாக திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் முற்றிலும் தடுக்கப்படும் வரை இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர் மன்ற தீர்மான எண்.125 நாள்.29.05.2020ன் படி டெங்கு காய்ச்சல் தொற்று நோய் தடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை தொடர்ந்து 01.04.2022 முதல் 30.04.2022 வரை திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இப்பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.447/2017/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ)பொது சுகாதாரபிரிவு அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண் : 8</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பிரதான குழாய்கள், வால்வுகள், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் பிரதான குழாய்கள், ஏர்வால்வுகள் மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான குழாய்கள் மற்றும் விநியோக குழாய்கள் ஆகியவற்றின் பழுதுகள், குழாய் உடைப்புகள் சரி செய்ய 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காகவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூபாய் 9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.408/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட பணியினை 2022-2023 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 9**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள், ஸ்டாட்டர்கள், அண்ணா நகர் நீருந்து நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள மின் மோட்டார்கள், ஆழ்குழாய் கிணற்றின் மின் மோட்டார்கள், நகராட்சிக் கட்டிடங்களில் உள்ள மின் சாதனப் பொருட்கள், பொதுக்கழிப்பிடங்களில் உள்ள மின் சாதனப் பொருட்கள் ஆகியவற்றின் பழுதுகள் சரி செய்யவும், 2022 – 2023 ஆம் ஆண்டிற்காக பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூபாய் 7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.409/2022/இ1)**

அலுவலக குறிப்பு:–

அ) அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை 2022-2023 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்..

**பொருள் எண் :10**

ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் நடைபெற்ற நகர்புற உள்ளாட்சித் தேர்தலைத் தொடர்ந்து நகர்மன்ற கூட்ட அறை, நகர்மன்ற தலைவர் அறை, அலுவலக கழிப்பிடம் ஆகியவற்றில் மராமத்து பணி மேற்கொள்ளவும், நகர்மன்ற அறைக்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யவும் மற்றும் ஆதார் இ–சேவை மைய அறையின் பழுதடைந்த மேற்கூரையில் மராமத்து பணி மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 410/2022/இ1)**

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் :11**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 6 வார்டுகளில் 41 தூய்மை பணியாளர்கள் விபிஎன் பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4861/P3/2018 நாள்.28.02.2018 அனுமதியின் படி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.06.06.2019ன் படி பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.30.06.2019ன் படி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.12.2021 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை மேலும் இரண்டு மாதம் (01.02.2022 முதல் 31.03.2022 வரை) பணியினை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மேலும் ஒரு மாதம் (01.04.2022 முதல் 30.04.2022 வரை) விபிஎன் பில்டர்ஸ், திருப்பூர் ஒப்பந்ததாரர் அவர்களை பணி செய்ய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.25/2016/எச்1)**

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) பொது சுகாதாரபிரிவு அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் :12**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.14000/2021/இ1 நாள்.09.09.2021ல் கோரியுள்ளபடி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதியில் புதிதாக தெரு விளக்குகள்(LED விளக்கு) பொருத்துதல் மற்றும் புதிதாக முறைப்படுத்தப்பட்ட, அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் விடுபட்ட இடங்களில் ஏற்கனவே உள்ள மின்கம்பத்தில் மின்கம்பி அமைத்து புதிதாக தெருவிளக்குகள் (LED விளக்கு) பொருத்துதல் பணிக்காக (Light fittings with EB line) ரூ.24.48 இலட்சத்திற்கு பிரேரணை தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு 01.10.2021 ஆம் தேதியன்று அனுப்பப்பட்டது. இந்நிலையில் மேற்கண்ட பணியினை 15வது மத்திய நிதிக்குழு மானியம் ($15^{th}$ CFC) 2021–2022ன் கீழ் ஒதுக்கப்பட்ட Untied Grant தொகை ரூ.22.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டவுடன் இப்பணியினை மேற்கொள்ளவும், தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் வரைபடம் கொடுத்து பட்டியல் பெற்று தொகை செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பணியின் விபரம்:–**

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | தெரு விளக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 1 | சக்தி லே அவுட் | 3 |
| 2 | 2 | SRT பின்புறம் வீதி | 7 |
| 3 | 3 | மறைமலையடிகள் தெரு | 3 |
| 4 | 4 | ஜவஹர் மெயின் ரோடு | 6 |
| 5 | 5 | நாடார் தோட்டம் | 3 |
| 6 | 4,5,6 | செங்குந்தபுரம் (ஹாஸ்பிட்டல் ரோடு) , சுல்தான் ரோடு | 4,9 |
| 7 | 7 | அண்ணாமலையார் நகர் | 5 |
| 8 | 7 | அண்ணாநகர் | 5 |
| 9 | 9 | மாரியம்மன் கோவில் தெரு | 6 |
| 10 | 10 | காந்திநகர் புதுகாலனி | 9 |
| 11 | 10 | தில்லைநகர் | 5 |
| 12 | 10 | நம்பியூர் ரோடு | 4 |
| 13 | 10 | ஸ்ரீ வாரி கார்டன் | 6 |
| 14 | 10 | சின்னைய கவுண்டர் தெரு | 3 |
| 15 | 11 | திருமலை கார்டன், தோட்டசாலை, அம்மன் நகர் | 15,15 |
| 16 | 11 | காந்திநகர் மேல்பகுதி | 7 |
| 17 | 12 | தோட்டசாலை | 5 |
| 18 | 13 | ஸ்ரீதேவி தியேட்டர் பின்புறம் | 3 |
| 19 | 13 | அவிநாசி ரோடு | 7 |

| | | | |
|---|---|---|---|
| 20 | 14 | கணபதி நகர் | 14 |
| 21 | 14 | லட்சுமி நகர் | 14 |
| 22 | 14 | AKR சிட்டி | 18 |
| 23 | 14 | ஐஸ்வர்யா கார்டன் | 8 |
| 24 | 14 | ஜெ.ஜெ.நகர் | 8 |
| 25 | 14 | மேட்டுப்பாளையம் ரோடு | 5 |
| 26 | 14 | கோவை மெயின் ரோடு | 10 |
| 27 | 15 | வாரச்சந்தை, தோட்டசாலை | 10,5 |
| 28 | 15 | மாதம்பாளையம் ரோடு | 3 |
| 29 | 16 | கோவை கார்டன் | 12 |
| 30 | 16 | மாதவி தெரு | 5 |
| 31 | 16 | ராயல் நகர் | 5 |
| 32 | 16 | திருமகள் கார்டன் | 5 |
| | | **மொத்தம்** | 252 |

**(ந.க.எண்.1162/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)அரசு மானியம் வழங்கும் தொகையில் பணி மேற்கொள்ளவும் கூடுதல் செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண் :13**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி மற்றும் கணினி சார்பு உபகரணங்கள் (Hardware and Software ) 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 411/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட பணியினை 2022-2023 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் பொது நிதியில் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**பொருள் எண் :14**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலைய வணிக வளாக கடைகளின் முதல் 3 ஆண்டு குத்தகை காலம் 31.01.2022 உடன் முடிவடைவதால் கீழ்கண்ட விவரப்படி உள்ள 17 குத்தகை உரிமதாரர்கள் மேலும், 01.02.2022 முதல் 31.01.2025 வரை உள்ள 3 ஆண்டுகளுக்கு, இரண்டாவது முறையாக குத்தகையை புதுப்பிக்க கட்டணம் ரூ.1000/– செலுத்தி, தற்போதைய வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து வாடகை நிர்ணயம் செய்து, குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்ய சம்மதித்து கடிதம் வழங்கியுள்ளனர்.

அதனடிப்படையில் கீழ்கண்ட விவரப்படி உள்ள 17 குத்தகை உரிமதாரர்களுக்கு, 31.01.222ம் தேதிய வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து 01.02.2022 முதல் வாடகை நிர்ணயம் செய்து உத்திரவிட, தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**01.02.2022 முதல் 31.01.2025 வரை இரண்டாவது முறையாக மூன்று ஆண்டுகளுக்கு நீடிப்பு செய்து 31.01.2022 வாடகையில் 15% உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை விவரம்**

| பேருந்து நிலைய வணிக வளாக கடைகளின் 01.02.2022 முதல் நிர்ணயம் செய்யப்பட்ட மாதாந்திர வாடகை தொகை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண். | வரிவிதிப்பு எண் | கடை விபரம் | உரிமதாரர் பெயர் | 31.01.2022ல் மாத வாடகை | 15% உயர்வு | 01.02.2022 முதல் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகை |
| 1 | 060/BD01/00021 | 2 | என்.பாண்டியராஜன் | 8700 | 1305 | 10005 |
| 2 | 060/BD01/00023 | 3 | என்.பாண்டியராஜன் | 8700 | 1305 | 10005 |
| 3 | 060/BD01/00020 | 5 | பி.ஆர்.ஆனந்தவேல் | 8700 | 1305 | 10005 |
| 4 | 060/BD01/00016 | 7 | கே.ரவி | 7700 | 1155 | 8855 |
| 5 | 060/BD01/00017 | 8 | ஜாகிர் உசேன் | 8850 | 1328 | 10178 |
| 6 | 060/BD01/00018 | 9 | ஜி . தினேஷ்குமார் | 8700 | 1305 | 10005 |
| 7 | 060/BD01/00045 | 10 | கே.வி.ஞானவடிவேல் | 9100 | 1365 | 10465 |
| 8 | 060/BD01/00047 | 11 | ஏ.யுவராஜ் | 9000 | 1350 | 10350 |
| 9 | 060/BD01/00014 | 12 | பி.வெங்கடாசலபதி | 9400 | 1410 | 10810 |
| 10 | 060/BD01/00004 | 13 | எம்.கோபாலகிருஷ்ணன் | 9000 | 1350 | 10350 |
| 11 | 060/BD01/00003 | 18 | கே.கிருஷ்ணசாமி | 8800 | 1320 | 10120 |
| 12 | 060/BD01/00005 | 19 | வி.செல்வராஜ் | 8700 | 1305 | 10005 |
| 13 | 060/BD01/00006 | 20 | எம்.கோகிலா | 8750 | 1313 | 10063 |
| 14 | 060/BD01/00046 | 21 | என்.முருகேசன் | 8800 | 1320 | 10120 |
| 15 | 060/BD01/00007 | 22 | எஸ்.கே.சீனிவாசன் | 8750 | 1313 | 10063 |
| 16 | 060/BD01/00009 | 25 | ஜெ.ஜெக்கினா | 8750 | 1313 | 10063 |
| 17 | 060/BD01/00013 | 30 | கே.கார்த்திக் | 8700 | 1305 | 10005 |

**(ந.க.எண்.129/2022/அ1)**

அலுவலகக்குறிப்பு :

1. அரசு (நிலை) ஆணை எண்.92 நாள்.03.07.2007 நகராட்சி நிர்வகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை மற்றும் குத்தகை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு உட்பட்டு பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள 17 கடைகளுக்கு இரண்டாவது முறையாக மேலும் 3 ஆண்டுகளுக்கு 01.02.2022 முதல் 31.01.2025 வரை நீட்டிப்பு செய்தும், தற்போதைய வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து வாடகை நிர்ணயம் செய்து உத்திரவிட அனுமதிக்கலாம்.
2. பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள 16, 27 மற்றும் 28 ஆகிய 3 கடைகள் 31.01.2022 அன்று நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள கடைகளில் கடை எண்.1,4,6,23,24 மற்றும் 28 ஆகிய 6 கடைகள் வாடகை நிலுவை உள்ளதால் நகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி 9 கடைகளின் வாடகை நிலுவைத்தொகைக்கு அன்னாரின் வைப்புத்தொகையை ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி 9 கடைகளுக்கும் குத்தகை ஏல நிபந்தனைகளின் படி பொது ஏலம் நடத்த மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண் :15</u>

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் வட்டாரத்திற்குட்பட்ட, புன்செய்ப் புளியம்பட்டி பேரூராட்சியானது, நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், பவானிசாகர் ஒன்றியத்திற்கு சொந்தமான, புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குள் உள்ள க.ச.எண்.242/5–ல் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி, சத்திரம் பள்ளி கட்டிடத்தினை புன்செய் புளியம்பட்டி நகராட்சிக்கு, பவானிசாகர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க. எண்.2805/2021/அ2 நாள் 17.02.2022–ன் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**(ந.க.எண்.1628/2019/எப்1)**

**அலுவலகக் குறிப்பு :**

ஏற்றுக்கொள்ளப்பட்டது.

<u>பொருள் எண் :16</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, சுப்பராயலு தெரு பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை குழாயில் புதிதாக மின்மோட்டார் அமைத்து 20,000லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலைத்தொட்டி அமைத்து மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.406/2022/இ1)**

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண் :17</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, சின்னய்ய கவுடர் தெரு பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கான்கிரீட் மேடை அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்து அமைத்து மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.412/2022/இ1)**

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண் :18</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.07, கண்ணகி வீதி பகுதியில் ஏற்கனவே உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் அதனை சீரமைத்து மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.405/2022/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண் :19</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.06, நாவலர் வீதி பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதிதாக மின்மோட்டர் அமைக்கவும், மேலும் நாவலர் இணை வீதியில் உள்ள உப்பு தண்ணீர் குழாய் பழுது சரிசெய்யவும் மற்றும் நாவல் தெருவில் உள்ள கான்கிரீட் சாலையை சீரமைத்து மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.407/2022/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண் :20</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பிரதான வாய்காலில் இருந்து பெறப்படும் குடிநீரானது சுத்திகரிக்கப்படாமலும், மழைகாலங்களில் கலங்கலாக வருவதாலும் குடிநீரானது சுத்திகரிப்பு நிலையத்திற்கு பெறப்பட்டு படிகாரம் (ஆலம்) கொண்டு சுத்திகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் குடிநீர் சுத்திகரிப்பு பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், இப்பணிக்கு ஒரு வருடத்திற்கு 5000Kg படிகாரம் (ஆலம்) கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 413 /2022/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை 2022-2023 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண் :21</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீர் சுத்திகரிப்பு பணி மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு தேவையான குளோரின் கேஸ் சிலிண்டர் வாங்கி பயன்படுத்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 414/2022/இ1)**

அலுவலக குறிப்பு:—

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை 2022-2023 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**